முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 33/2022

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனலட்சுமி | வா.சா.–1 | சாதி |
| த/பெ. | | | மதம் |
| கிராமம் | | | தொழில் |
| தாலுகா | | | வயது |

---

முதல் விசாரணை 23–06–2025.

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். 28.11.1964ம் தேதியிட்ட என்னுடைய தாத்தா பெயரில் உள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 21.02.2019ம் தேதியிட்ட வழக்குச்சொத்தின் பெயரில் 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்துள்ள கிரைய ஆவணம் இணையதள நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 10.07.2019ம் தேதியிட்ட 1 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் எண்ணம் –2 **வா.சா.ஆ.4** ஆகும். 20.07.2019ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு சார்பு நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 23.07.2019ம் தேதியிட்ட 6ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு சார்பு நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 11.09.2019ம் தேதியிட்ட என்னுடைய வழக்கறிஞர் மூலமாக 6ம் பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய

மறுப்பு அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் அசல் **வா.சா.ஆ.7** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

6 ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S